**தலைப்பு 203 – கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

---

### 1.1 கணக்காய்வு அபிப்பிராயம்

---

கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2020 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தம்பர் 16 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கிறிஸ்தவ சமய அலுவல்கள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல்,

வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாகாண திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என்பது,

(ஆ) இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புகள் தொடர்பில் கடந்த வருடத்தில் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் எனது அறிக்கையில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | அவதானிப்புகள்<br>இணக்கமின்மைகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- | --- | --- |
| **(அ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 109 | 2011 சனவரி 10 ஆந் திகதி விபத்திற்குள்ளாகி மீண்டும் பழுதுபார்க்க முடியாத நிலைக்கு உள்ளாகிய வேன் தொடர்பில் காப்புறுதியிலிருந்து அறவிட முடியாது போன பெறுமதியை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |
| (ii) | நிதிப் பிரமாணம் 751(2) | அரசின் சுற்றுலா விடுதிகள் உள்ளடங்களாக அனைத்து கட்டிடங்களிலும் உள்ள அனைத்து மின் பொருத்திகள் மற்றும் உபகரணங்கள் ஆகியன தொடர்பில் பொருட்பதிவேட்டினை தயாரித்து பேணப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்திற்கு சொந்தமான சுற்றுலா விடுதிக்காக மின் பொருத்திகளின் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அவ்வாறானதொரு பதிவேட்டினை பேணுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். |
| (ஆ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய மற்றும் 02/2018 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை | திணைக்களத்தின் மனிதவள அபிவிருத்திக்காக மனிதவள அபிவிருத்தித் திட்டமொன்றினை தயாரித்து, திணைக்களத்தில் சேவையாற்றும் ஒட்டுமொத்த பதவியணிக்காகவும் வருடாந்த செயலாற்றல் உடன்படிய்கையொன்றினை கைச்சாத்திட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் 2019 ஆம் | சுற்றறிக்கையின் பிரகாரம், வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டியமை. | எதிர்காலத்தில் செயலாற்றல் உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

ஆண்டிற்காக சுற்றறிக்கையின் பிரகாரம் செயலாற்றல் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது திணைக்களத்தினால் 14 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக மற்றும் 7 மூலதன செலவின விடயங்களுக்காக தேவையான மொத்த நிதியேற்பாடும் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் மொத்த நிதியேற்பாட்டில் ரூபா 193,841,404 இல்லது 23 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சிற்குரிய நிதியேற்பாடுகள் எஞ்சியிருந்தன. | ஆண்டிங்கான தேவைப்பாடு தொடர்பில் உரிய முறையில் எதிர்வுகூறப்பட்டு, நிதியேற்பாடுகள் உச்ச அளவில் பயன்படுத்தப்பட வேண்டியமை. | செலவினக் கட்டுப்பாடு, பாதுகாப்பு நிலைமைகள் காரணமாக கடமைகள் இரத்துச்செய்யப்படல், கட்டுநிதி கிடைக்கப்பெறாமை மற்றும் எதிர்பார்த்த செலவினங்கள் ஏற்படாமை போன்ற காரணங்களால் நிதியேற்பாட்டில் சேமிப்புகள் ஏற்பட்டிருந்தன. |

### 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 மார்ச் மாதத்தின் போது சேவையை கைவிட்டுச்சென்ற உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 100,558 தொகை அறவிடப்பட ஆவண்டியதாக இருந்ததுடன், 2020 மே 20 ஆந் திகதி வரையிலும் அந்த மீதியில் ரூபா 80,558 இன்னும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | குறித்தி உத்தியோகத்தர்களிடமிருந்து அல்லது பிணையாளர்களிடமிருந்து உரிய பெறுமதி அறவிடப்பட வேண்டியமை. | மாதாந்தம் பணத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. |